# BSNLஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்.

*சுற்றறிக்கை எண்:- 01* *தேதி 07.03.2010.*

## BSNLஐ பாதுகாப்போம்.

2006 ஆம் வருடம் வரை மிகப்பெரிய அளவில் லாபமீட்டி வந்த BSNL நிறுவனத்தில், கடந்த மூன்று வருடமாக வருமானமும் லாபமும் கணிசமாக குறைந்து வருகிறது. இதனை சரி செய்ய என்ன செய்ய வேண்டும் என ஆராய பிரதமரின் தொழில் நுட்ப ஆலோசகரான சாம் பிட்ரோடா தலைமையில் ஒரு கமிட்டியினை அமைத்த பிரதமர், ஒரு மாத காலத்தில் அதன் பரிந்துரைகளை கொடுக்க வேண்டும் என அறிவித்தார். அரசு அறிவித்த பல கமிட்டிகள் தனது முடிவுகளை அறிவிக்க பல ஆண்டு காலம் எடுத்து வரும் சூழ்நிலையில், இந்த கமிட்டி தனது பரிந்துரைகளை உடனடியாக கொடுத்துள்ளதாக பத்திரிக்கை செய்திகள் சொல்கின்றன. அந்தக் குழு பரிந்துரைத்ததாக சொல்லப்பட்ட விஷயங்கள் அனைத்தும் BSNLஐ சீர்குலைக்க பல கட்டங்களில் பலரால் முன்மொழியப்பட்டு ஊழியர்களால் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்ட விஷயங்களே.

தனியார் நிறுவனங்கள் செல்லுலார் தொலை பேசி சேவை தர ஆரம்பித்து பல வருடங்கள் கழிந்த பின்னரே BSNL நிறுவனத்திற்கு அதற்கான அனுமதி தரப்பட்டது. BSNL சேவையில் நுழைந்த பின்னர், அதுவரை தனியார் நிறுவனங்கள் இதில் அடித்த கொள்ளை தடுத்து நிறுத்தப்பட்டது. அதுவரை எட்டு ரூபாய் வரை வசூலிக்கப்பட்டு வந்த Incoming Callகள் அனைத்தும் இலவசமாக ஆக்கப்பட்டது. நகரப் பகுதிகளில் மட்டும் இருந்து வந்த சேவை குக்கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. Outgoing Call களுக்கு ஒன்று/இரண்டு விநாடிகளுக்கு ஒரு பைசா என்ற அளவில் குறைக்கப்பட்டு உள்ளது. மொத்தத்தில் அது வரை பணக்காரர்களின் சொகுசாக இருந்த செல்லுலார் சேவை என்பது அனைத்து பகுதி மக்களின் அத்தியாவசிய பொருளாக மாறி உள்ளது.

2002ல் சேவை தர ஆரம்பித்த BSNL நிறுவனம் 2006ஆம் வருடத்தில் மொத்த தொலை தொடர்பு சேவையிலும் தரைவழி இணைப்புகளிலும் முதல் இடத்தை பிடித்தது. செல்லுலார் சேவையில் இரண்டாம் இடத்தை பிடித்தது. முதலிடத்தில் இருந்த பாரதி ஏர்டெல் நிறுவனத்தை மிஞ்சக்கூடிய வேகத்தில் அதன் முன்னேற்றம் இருந்தது. அந்த சமயத்தில் தான் BSNL வளர்ச்சியை தடுக்க அரசியல் சதி அரங்கேற்றப்பட்டது. 4.5 கோடி தொலைபேசி இணைப்புகளுக்கான டெண்டர் அரசாங்கத்தால் ரத்து செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆனால் BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையில் BSNLல் உள்ள அதிகாரிகள் ஊழியர்களின் கூட்டமைப்பான UNITED FORUM மூலம் நடத்தப்பட்ட ஜூலை 11,2007 வேலை நிறுத்தத்தின் காரணமாக 2.3 கோடி இணைப்புகளுக்கான கருவிகள் வாங்க முடிவு செய்யப்பட்டது. இல்லையெனில் நிலைமை இன்னமும் மோசமாக போயிருக்கும். அப்போது அமைச்சரால் அறிவிக்கப்பட்ட 9.3 கோடி இணைப்புகளுக்கான கருவிகள் வாங்குவதற்கான அடுத்த டெண்டரும் இரண்டரை ஆண்டு காலத்திற்கு பின் தற்போது இந்தக் கமிட்டியின் பரிந்துரையால் ரத்து செய்யப்பட்டுள்ளது. கருவிகள் வாங்குவதற்கான நிதி ஆதாரம் இங்கு பிரச்சனை இல்லை. தேவையற்ற தலையீடுகளே BSNLன் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. எனவே 2006ல் இறுதி செய்யப்பட்ட டெண்டர் மூலம் கருவிகள் கிடைத்திருந்தால் BSNL தற்போது முதலாம் இடத்திற்கு வந்திருக்கும். தற்போதும் இறுதி செய்யப்பட்ட டெண்டர் மூலம் கருவிகள் வாங்கினாலே தற்போது ஏற்பட்டிருக்கும் வருமானமும், லாபமும் குறைவு என்ற நிலையை மாற்ற முடியும்.

எனவே BSNLன் வளர்ச்சிக்கு தேவையான கருவிகள் பெற தடை செய்யும் இடையூறுகளை நீக்குவதும், தரைவழி மற்றும் செல்லுலார் சேவைகளை அதிகரிப்பதுவும், சேவையை முன்னேற்றுவதும் தான் அவசியம். மேலும் அதன் நிதியாதாரத்தை பலப்படுத்த அரசாங்கத்திற்கு BSNL நிறுவனம் செலுத்த வேண்டிய லைசென்ஸ் கட்டணம், ஈவுத் தொகை உள்ளிட்ட கட்டணங்களை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்வதும், அதில் அரசாங்கத்தின் தேவையற்ற தலையீட்டினை தவிர்ப்பதும் அவசியம். தற்போதுள்ள நிச்சயமற்ற தன்மை மற்றும் குழப்பங்களை தீர்க்கக் கூடிய வகையில் ITS அதிகாரிகளை BSNL இணைப்பது என்ற பிரச்சனையை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

எனவே ஒரு லட்சம் ஊழியர்களை கட்டாய ஓய்வு மூலம் வேலையை விட்டு அனுப்புவது, முப்பது சதவிகித பங்குகளை விற்பனை செய்வது, last mil copper கேபிள்களை அனைவருக்கும் தாரைவார்ப்பது உள்ளிட்ட சாம் பிட்ரோடா குழுவின் பரிந்துரையை அரசு நிராகரித்துவிட்டு பொது மக்களின் சொத்தாக இருக்கும், பொது மக்களுக்கு ஆதரவாக இருக்கும் BSNL எனும் பொதுத்துறை நிறுவனத்தை பாதுகாக்க தேவையான நியாயமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

BSNL நிறுவனத்தை பாதுகாக்க, பங்கு விற்பனையை தடுக்க எப்போதும் போராடி வரும் BSNL ஊழியர்களும் அதிகாரிகளும் இப்போதும் போராட்டத்திற்கு தயாராகவே உள்ளனர் என்பதையும் அரசாங்கமும் நிர்வாகமும் உணர்ந்திருக்கும். இல்லையெனில் உணர வைப்போம்.

நமது வாழ்வும் வளமும் எப்போதும் BSNL என்ற உணர்வோடு சக தோழர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் நமது இன்றைய தேவை BSNLஐ பாதுகாப்பது என்ற உணர்வை கொண்டு செல்வோம். BSNLஐ பாதுகாப்போம்.

**தோழமை வாழ்த்துக்களுடன்,**

**S. செல்லப்பா.**
**மாநில செயலர்.**

# சாம் பிட்ரோடா கமிட்டியின் பரிந்துரைகள்
## (புதிய மொந்தையில் பழைய கள்)

BSNLல் தேவைக்கு அதிகமாக ஒரு லட்சம் ஊழியர்கள் உள்ளனர்.

01) BSNLன் 30% பங்குகளை விற்க வேண்டும். 10% பங்கு விற்பனையில் கிடைக்கும் பணம் அரசுக்கும் மீதமுள்ள 20% பங்கு விற்பனையில் கிடைக்கும் பணம் BSNLன் விஸ்தரிப்புக்கும், விருப்ப ஓய்வு திட்டத்திற்கும் பயன் படுத்த வேண்டும்.

02) BSNL க்கு தனியார் துறையில் சிறப்பாக பணியாற்றும் ஒரு நபரை தலைமை தாங்கச் செய்ய வேண்டும்.

03) மூன்றாண்டுகளில் 3 கோடி Broad band சந்தாதாரர்களை வென்றடைவது.

04) கருவிகளை வாங்குவதற்கு மத்திய லஞ்ச ஒழிப்புத்துறை(CVC)யிடம் ஆலோசனை கேட்பது.

05) நில வங்கிக்காக ஒரு துணை நிறுவனம் உருவாக்கி Real Estate நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது.

06) Tower நிர்மாணத்திற்கென ஒரு தனி நிறுவனம் உருவாக்குவது மற்றும் IPO அல்லது கேந்திர பங்குவிற்பனை மூலம் நிறுவனத்தின் மதிப்பை அறிந்துக் கொள்வது.

07) தொழில் நுட்ப நிறுவனங்களை வாங்குவதற்கோ அல்லது அதில் முதலீடு செய்வதற்கோ BSNL நிதியினை செலவிட வேண்டும்.

08) Last mile local loop என்கிற Copper Cableகளை அனைவரின் பயன்பாட்டிற்கும் தர வேண்டும்.

BSNL நிறுவனத்தினை புனரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட பிரதமரின் ஆலோசகராக உள்ள சாம்பிட்ரோடா தலைமையிலான குழு BSNLன் ஒரு லட்சம் ஊழியர்களை குறைப்பது உள்ளிட்ட 15 அம்ச திட்டத்தை அறிவித்துள்ளது.

தற்போது BSNL நிறுவனம் மூன்று லட்சம் ஊழியர்களோடு, ரயில்வே துறையை போல மிகப்பெரிய அளவிலான ஊழியர்களை கொண்ட நிறுவனம்.

BSNL நிறுவனம் அமைப்பு ரீதியான செயல்பாடுகளிலும், ஊழியர்களின் உற்பத்தித் திறனையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க வேண்டி உள்ளது. விருப்ப ஓய்வுத் திட்டம் போன்ற சிறந்த சாத்தியமான வழிகளில் ஒரு லட்சம் ஊழியர்களை ஓய்வு பெறச்செய்ய வேண்டும் அல்லது மாற்றலில் அனுப்பவேண்டும்.

அரசுத் துறை நிறுவனமான BSNLல் தனியார் துறையில் உள்ளதை விட பத்து மடங்கு ஊழியர்கள் அதிகமாக உள்ளனர். உதாரணமாக நாடு முழுவதும் 12.2 கோடி சந்தாதாரர்களைக் கொண்ட பாரதி ஏர்டெல் நிறுவனம் 25,000 ஊழியர்களை கொண்டு செயல்பாடுகிறது. செல்லுலார் தொலைபேசி சேவையில் 10,500 சந்தாதாரர்களுக்கு ஒரு ஊழியர் உள்ளார். 6.5 கோடி கம்பியில்லா சந்தாதாரர்களையும் 2.79 தரைவழி இணைப்புகளையும் கொண்ட BSNL நிறுவனத்தில் மூன்று லட்சம் ஊழியர்கள் உள்ளனர். அதாவது 350 சந்தாதாரர்க்கு ஒரு ஊழியர் உள்ளார்.

ஒரு இந்திய கேந்திரமான முதலீட்டாளருக்கு அல்லது IPO மூலமாக BSNLந் 30 சதமான பங்குகளை விற்பனை செய்ய அரசுக்கு பரிந்துரைத்துள்ள சாம் பிட்ரோடா குழு, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியை ஊழியர்களின் விருப்ப ஓய்வுத் திட்டத்திற்கும், BSNLன் விரிவாக்கம் மற்றும் செயல்பாடுகளுக்கு பயன் படுத்த வேண்டும் என கூறியுள்ளது.

Call center, தகவல் தொழில்நுட்பம் மற்றும் Network தொடர்பான சேவைகளை Outsourcing முறையில் கையாள BSNL நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பாரதி ஏர்டெல், வோடோபோன் போன்ற தனியார் நிறுவனங்கள் இது போன்ற Outsourcing முறையை பின்பற்றுவதாலேயே மனித சக்தி தேவையை மிகப்பெரிய அளவில் குறைத்துள்ளனர்.

தடுமாறும் இந்த பொதுத்துறை நிறுவனத்தை புனரமைக்க பிரதமர் கடந்த ஜனவரி மாதத்தில் இந்தக் கமிட்டியை அமைத்தார். 'இந்த நிறுவனம் கடும் நெருக்கடியில் உள்ளதோடு முதன்முறையாக நஷ்டமடைகிறது.அதிகரிக்கும் போட்டி, குறைந்து வரும் தரைவழி இணைப்புகள், கற்கால நடைமுறைகள், கருவிகளை வாங்குவதில் ஏற்படும் நடைமுறை தடைகள், அதிகார வர்க்கப் போக்கு மற்றும் முடிவெடுப்பதில் அரசாங்கத்தை சார்ந்து நிற்கும் தன்மையே இதற்கு காரணம்' என அந்தக் கமிட்டி கூறியுள்ளது.

**நிர்வாக மாற்றங்கள்:-**

தனியார் துறையில் சிறந்து விளங்குபவர்களை இந்நிறுவன்த்தின் தலைவராக நியமித்து அவருக்கு துணையாக மிகச் சிறந்த நிபுணர்களை, அவர்களுக்கு வெளிச்சந்தையில் என்ன ஊதியம் கிடைக்குமோ அந்த ஊதியத்தை தந்து அமர்த்த வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. 'நிர்வாக இயக்குனர் பதவியையும் தலைவர் பதவியையும் தனியாக பிரிப்பது. இயக்குனர் குழுவை ஏழாக மாற்றி அதனுடன் தான் அமைச்சரகங்கள் பேச வேண்டுமே ஒழிய அன்றாட பணிகளில் தலையிடக்கூடாது' எனவும் கூறியுள்ளது.

வியாபாரத்தை மறு சீரமைப்பதர்கான ஆலோசனைகளாக தரைவழிசேவை, மொபைல் சேவை, நிறுவன சேவை மற்றும் புதிய வியாபாரம் ஆகியவற்றிற்காக தனித்தனியான நான்கு கிளைகளை உறுவாக்க இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. மேலும் கோபுரங்கள் நிர்மாணிப்பதை ஒரு துணை நிறுவனம் மூலம் செய்வது அதன் மதிப்பை தனியாக கேந்திரமான பங்குவிற்பனை அல்லது IPO மூலம் கணக்கிடுவது.

(ஏழு பெரு நகரங்களில் மட்டும் மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 25 லட்சம் சதுர மீட்டர் அளவிலான) முன்னேற்றப்படாத நில வங்கியினை பராமரிக்க ஒரு துணை நிறுவனத்தை உருவாக்க வேண்டும். கருவிகள் வாங்குவதில் உள்ள கால தாமதத்தை தவிர்க்க தொடர்ச்சியான ஒப்பந்தங்கள், மின் கொள்முதல் மற்றும் சந்தை நிலவரத்திற்கேற்ப வாங்குதல் உள்ளிட்ட முறைகளை BSNL நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்தக் கமிட்டி பரிந்துரைத்துள்ளது.

ஆட்குறைப்பையோ பங்குவிற்பனையையோ ஊழியர் சங்கங்கள் கடுமையாக எதிர்க்கும் என்பதால் அரசு இந்த பரிந்துரைகளை அமுலாக்குவது என்பது கடினமான பணி என பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கிறது.